தமிழ்

தரம் -04

மேல்/கள/அல்- முபாறக் கனிஷ்ட வித்தியாலயம் - மள்வானை

சொற்கள்.

www.lkedu.lk

ஆசிரியர் :- M.Abdul Waajith (B.A, PGDE)

சொற்கள் இரண்டு வகைப்படும்.



www.lkedu.lk

பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும்

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. குணப்பெயர்
6. தொழிற்பெயர்

www.lkedu.lk

1.பொருட்பெயர்

உயிருள்ள,உயிரற்ற பொருட்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும்.

உதாரணம்:- அமுதன், பாத்திமா, கதிரை, கிளி, சிங்கம்

- மேற்குறிப்பிட்ட உதாரணங்களில் உயர்திணையான மனிதர்களின் பெயர்களும் உள்ளன. அ.்றிணைப் பொருட்களும் உள்ளன. எனவே, உயர்திணைப் பெயர்கள், அ.்றிணைப் பொருட்கள் ஆகிய அனைத்தும் பொருட்பெயர் ஆகும்.






www.kedu.lk

2. இடப்பெயர்


ஏதேனும் ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

ஊர்களின் பெயர்களும் ஊரிலுள்ள நிலப்பிரிவுகளின் பெயர்களும் இடப்பெயர்களாகும்.

உதாரணம்:- புத்தளம், கண்டி, பாடசாலை, வைத்தியசாலை, இலங்கை







www.lkedu.lk

3. காலப்பெயர்

ஏதேனும் ஓரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

உதாரணம்:- திங்கட்கிழமை, தை, காலை, மாலை, மாரி காலம், கோடை காலம்.







www.lkedu.lk

4.சினைப்பெயர்

உறுப்புக்களைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

சினை என்றால் உறுப்பு என்று பொருள்.

உயர்திணையான மனிதர்களின் உறுப்புக்களையும் அ.்றிணைப் பொருட்களின் உறுப்புக்களையும் இது குறிக்கும்.

உதாரணம்:- கை, கண், கிளை, இலை, பூ








www.lkedu.lk

5. குணப்பெயர்

ஒரு பொருளின் குணத்தையும் மனிதர்களின் குணத்தையும் உணர்த்தும் பெயர் குணப்பெயர் எனப்படும்.

நிறம்,சுவை,வடிவம்,அளவு ஆகியவற்றின் அடிப்படையில் குணப்பெயர் அமையும்.

உதாரணம்:- சிவப்பு, இனிப்பு, சதுரம், வட்டம், கோபம், இரக்கம்







www.ikedu.lk

6.தொழிற்பெயர்

ஏதேனும் ஒரு தொழிற்பாட்டை அல்லது செயலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

உதாரணம்:- படித்தல், ஓடுதல், குடித்தல், சாப்பிடுதல், விளையாடுதல்






www.tamilkedu.lk

வினைச்சொல்

ஒரு பொருளின் அசைவை, செய்கையை, அல்லது தொழிலை குறிக்கும் சொல் வினைச்சொல்லாகும்.

வினைச்சொல் எப்போதும் காலத்தை காட்டி நிற்கும்.

உதாரணம்:- சென்றன

உண்டான்

படிக்கிறான்

உதித்தது

ஓடினாள்

www.lkedu.lk